## தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை – 2011

---

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவு நிறுவனங்கள் (பதிவு செய்யும் அதிகாரச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென தான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக்கூற்றிலும் நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காசுப் பாய்ச்சுக் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1

(i) நியமத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நிறுவனம் தொடர்ந்து நடாத்திச் செல்லும் இயலுமை தொடர்பாக மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 132(இ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கு உரித்தான கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 108 ஆம் பந்தியின் பிரகாரம் செயலாற்றல் கூற்றிலோ அல்லது குறிப்புக்களிலோ செலவினங்களின் உப வகையொன்றுக்குரிய நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான வகையின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் பதிவுக் கட்டணங்களாக கிடைத்திருந்த ரூபா 11,988,000 ஆன வருமானம் வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 70 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகளை கருத்திற் கொண்டு சொத்தொன்றின் பயன்பாட்டு ஆயுட்காலம் திட்டவட்டமாக குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பான அலுவலக உபகணங்கள் மற்றும் கணனிகளுடன் கூடிய சகல நடைமுறையல்லா சொத்துக்களும் வருடாந்த் 5 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

## 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நேரடியான வங்கிக்கு கிடைக்கும் பதிவுக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடைமுறையொன்றை இனங்கண்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு முதல் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வங்கிக்கு நேரடியாக கிடைத்திருந்த ரூபா 17,039,250 தொகை 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இனங்காணப்பட்டு வருமானமாக கணக்கீடு செய்யப்படாதிருந்தமை 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் அக்காலப்பகுதியில் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டதாக வாடிக்கையாளரால் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பற்றுச்சீட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 13,957,895 தொகை வருமானமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அப்பணம் வங்கிக்கு கிடைத்திருக்கவில்லையென 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பதிவுக் கட்டண வருமானமாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 11,988,000 சரியானதெனவும் முழுமையானதெனவும் மற்றும் நம்பிக்கையானது என்பது தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் முதிர்ச்சியடைந்த திறைசேரி பட்டியல்களிலிருந்து நேரடியாக வங்கிக்கு கிடைத்திருந்த வட்டி வருமானம் ரூபா 570,055 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கிவ்லலை.

(இ) பேரவையின் பேரில் பேணப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கில் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,500,000 பேரவையின் பெயரிலான சேமிப்புக் கண்ககிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அக்கொடுக்கல் வாங்கல்களின் செலவுப் பதிவு காசேட்டில் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் அதற்கு சமமான பெறுமதியால் நடைமுறைப் பொறுப்பொன்றாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2007 ஆம் ஆண்டு முதல் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வங்கியால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூபா 6,100 மற்றும் ரூபா 34,752 ஆன வங்கி வரவு வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் சீராக்கப்பட்டிருந்த காசேட்டினை விட வங்கியில் குறைவாக காண்பிக்கப்படும் ரூபா 615,000 தொகையான இனங்காணப்படாத மீதி தொடர்பான எதுவித விபரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிக்கவில்லை. மேலும், காசேட்டில் மீதி வங்கி கணக்கிணக்க கூற்றில் குறிப்பிடப்பட்ட காசேட்டின் மீதிக்கு இடையே ரூபா 172,500 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது மேலும் காசேடு ரூபா 130,000 ஆல் குறைத்து சமப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,000,000 தொகையான திறைசேரி உண்டியல்களின் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த திறைசேரி உண்டியல்களின் இலக்கம், வைப்புச் செய்யப்பட்ட திகதி, முதிர்வடையும் திகதி மற்றும் பெறுமதி உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

2008 ஆம் ஆண்டின் போது வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் 03 மதிப்பிழந்த காசோலைகளின் ரூபா 272,500 பெறுமதியை குறித்த தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் உரிய அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்படாது பேரவையால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 6,928,573 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 139(6), 141(3)(இ) மற்றும் 384(2) | காசோலையொன்றின் மூலம் கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தர் மற்றும் காசோலையில் கையொப்பமிடும் உத்தியோகத்தர்கள் காசோலைகளில் குறிப்பிடப்படும் பெயர் மற்றும் ஏனைய விபரங்களை உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட அதன் விபரங்களுடன் இணங்குவதாக உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவுகளை செய்வதற்கும் காசோலையில் கையொப்பமிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் காசோலைகளின் பாதுகாப்பின் பொருட்டு சகல காசோலைகளும் குறுக்கு கோடிடப்பட வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டில் 2 காசோலைகள் மூலம் ரூபா 1,310,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 386(4) | வழங்கப்பட்ட சகல காசோலைகளும் அது எழுதப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது செல்லுபடிக் காலம் இல்லாமலே காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப்பிரமாணம் 388 | மீளாய்வாண்டில் காசோலை கையளிக்கும் பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. |

(iv) நிதிப் பிரமாணம் 395 — ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் நிலை தொடர்பாக அடுத்தவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பேரவையால் மீளாய்வாண்டிற்கான மாதாந்தம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், அதற்குப் பதிலாக 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி கணக்கிணக்க கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(v) நிதிப் பிரமாணம் 396 — கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 21,500 பெறுமதியான 2 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை — மீளாய்வாண்டின் இறுதி அளவில் காணப்பட்ட ரூபா 1,096,541 கிரயமான நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை — மீளாய்வாண்டின் இறுதி அளவில் காணப்பட்ட ரூபா 2,034,970 கிரயமான கணனிகளுக்காக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான ஒழுங்குபடுத்தல் பேரவையின் நிதி விளைவுகள் ரூபா 1,304,722 தொகையான மிகையாகக் காணப்பட்டதுடன் இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் போதான மிகை ரூபா 970,888 தொகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவில் ரூபா 333,834 ஆல் அதிகரித்திருந்தது. நிர்வாக செலவினம் ரூபா 1,932,205 ஆலும் மாகாண சபை பங்களிப்பு ரூபா 1,888,000 ஆலும் அதிகரித்திருந்த போதிலும் பதிவு கட்டண வருமானம் ரூபா 4,041,000 தொகையால் குறைவடைந்தமை மேற்குறித்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2007 ஆம் ஆண்டில் ரூபா 11,016,413 ஆன மிகை தளம்பல்களுடன், 2011 ஆம் ஆண்டளவில் ரூபா 1,304,722 ஆக இருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வுகளைக் கருத்திற்கொள்கையில் 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது பேரவையின் பங்களிப்பு முறையே ரூபா 11,168,903 தொகையும், ரூபா 6,711,807 தொகையும், ரூபா 2,871,214 தொகையும், ரூபா 2,530,453 தொகையும் ரூபா 2,721,073 தொகையக இருந்தது. 2007 ஆம் ஆண்டு முதல் முன்னைய ஆண்டு வரையில் பங்களிப்பு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முறையே 40 சதவீதத்தினாலும், 57 சதவீதத்தினாலும் 12 சதவீத வீழ்ச்சியொன்றும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பங்களிப்பு 7 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------

### 4.1 செயலாற்றல்

--------------------------

#### 4.1.1 திட்டமிடல்

-------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை நிறைவேற்றுவதற்காக 03 மாதங்களுக்கு குறையாத காலமொன்றுக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், பேரவையினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரவையினால் மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமல் இருந்தமையால் சபையின் செயலாற்றல் தொடர்பாக கருத்தினை சமர்ப்பிக்க முடியவில்லை.

(ஆ) 2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 2(1) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து தனியார் மருத்துவ நிலையங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். பேரவை ஆரம்பிக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை 1,747 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த எண்ணிக்கை 486 வரை அதாவது 72 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இவ்வாறு பதிவு குறைவடைவதற்கான காரணம் அந்த தனியார் மருத்துவ நிலையங்கள் மூடப்படுவதும் இல்லாவிட்டால் பதிவினை பெற்றுக்கொள்ளாமலே நிறுவனத்தை நடாத்திச் செல்வது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கையை இனங்காண்பதற்கும் பதிவு செய்வதற்கும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் செயற்படுத்துவதற்கு முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தவறியிருந்தது.

(i) பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவகங்களால் பேணப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்து கண்காணித்தல்

(ii) சகல தனியார் மருத்துவ நிலையங்களாலும் பதவியணியைச் சேர்க்கும் போது ஆகக் குறைந்த தகைமைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி பதவியணியை பயிற்றுவிக்கையில் ஆகக் குறைந்த தரங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

(iii) தனியார் மருத்துவ நிலையங்களால் வழங்கப்பட்டு வரும் அல்லது வழங்கப்படும் நோயாளிகளைப் பேணும் சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தல்.

(ஈ) சட்டத்தின் 13(1) பிரிவின் பிரகாரம் சபையின் ஆலோசனையின் பேரில் வர்த்தமானியில் வெளியிடப்படும் நியதிகள் மூலம் அமைச்சரால் தனியார் மருத்துவ நிறுவகங்களிற்காக தரப்படுத்தும் உத்தேச முறையொன்றை படிப்படியாக குறிப்பிட்டு செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பேரவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் போதுமானதன்மை இனங்காணப்பட்டு அதற்கு ஈடாகும் வகையில் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 7(1) உப பிரிவின் பிரகாரம் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனமொன்றாக இருக்க வேண்டுமெ குறிப்பிடப்பட்டிருந்தது. கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து அவ்வாண்டு முடிவடைந்ததன் பின்னர் 04 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பேரவையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஆறு வருட காலதாமதத்தின் பின்னர் 2018 மே 10 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் பேராவையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

### 5.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரவையினால் பேரவையில் புதிதாக பதிவு செய்யப்படும் தனியார் மருத்துவ நிறுவனங்களில் காட்சிப்படுத்துவதற்காக புதிய பெயர் பலகையொன்று வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 700 பெயர் பலகைகளை புதிதாக கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,087,000 செலவிடப்பட்டிருந்தது. அப்பெறுகை தொடர்பான வெளிப்படை தன்மை மற்றும் சிக்கனமான தன்மையுடன் நிறைவேற்றப்படாதிருந்ததாக கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(i) அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மூலம் முழுமையான பெறுகை செயற்பாடு செயற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் பேரவையினால் இக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக பேரவையின் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் போதும் மாதாந்த சபைக் கூட்டங்களின் போதும் எடுக்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் இக்கொள்வனவுகள் இடம்பெற்றிருந்தன.

(ii) அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப விதந்துரைகள், திட்டம் போன்றவை உட்பட கூறுவிலை கோரல் ஆவணங்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு எழுத்து மூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) 03 வழங்குனர்கள் மாத்திரம் கேள்விகளை சமர்ப்பித்திருந்த பொதிலும் மூன்று வழங்குனர்களும் கூறுவிலைகள் அழைப்பு விடப்பட்ட போதிலும் எவ்வாறு கூறுவிலை அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டது, எவ்வாறு கூறுவிலை கிடைத்தது என்பது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு எழுத்து மூலம் எதுவும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. கேள்வி சமர்ப்பித்த 3 வழங்குனர்களின் ஒரு வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் முகவரியொன்றோ அல்லது தொலைபேசி இலக்கமொன்றோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்வி திறப்பது தொடர்பாக வேலைகள் உரிய மாதிரிப் படிவமொன்றில் அறிக்கையிடப்பட்டு அதில் கேள்விகளை திறக்கும் குழுவின் சகல உறுப்பினர்களும் கையொப்பமிட வேண்டிய போதிலும் அவ்வாறான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(v) பெரிய, நடுத்தர மற்றும் சிறியதாக பெயரிடப்பட்டுள்ள 03 வகையான பெயர்ப் பலகைகளுக்காக கிடைக்கப் பெற்றிருந்த 3 கூறுவிலைகளுக்கு இடையே குறைந்த கேள்வி சமர்ப்பித்திருந்த வழங்குனர்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது ஒன்று ரூபா 2,620 வீதம் சிறிய அளவிலான 500 பெயர்ப் பலகைகளும், ஒன்று ரூபா 3,620 வீதம் நடுத்தர அளவிலான 100 பெயர்ப் பலகைகளும் ஒன்று ரூபா 4,150 வீதம் பெரிய அளவிலான 100 பெயர்ப் பலகைகள் மொத்தம் ரூபா 2,087,000 தொகை செலவு செய்து 700 பெயர் பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தத போதிலும் அப்பெயர் பலகைகளுக்காக திட்டவட்டமான விதந்துரைகள் தயாரிக்கப்படாதிருந்தமையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெயர்ப் பலகைக்காக செலவிடப்பட்டிருந்த தொகை சரியானதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | பேரவையினால் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் போதுமானதன்மை இனங்காணப்பட்டு அதற்கு ஈடாகும் வகையில் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு கணக்கீடு | வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களை தயாரிப்பதில் தாமதம் காணப்படல், தாமதமாக தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கம் சரியாக தயாரிக்கப்படாமை மற்றும் காசேட்டினை பேணுவதில் பலவீனம் காணப்பட்டமை |